முதன்மைக் கருத்து, துணைக்கருத்து, விளக்கம், சான்று ஆகியவற்றைப் பத்தியில் எழுதுக.

சாலைகளின் வசதிகள் அதிகரித்த போதிலும் சாலை விபத்துகள் நாளுக்கு நாள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. சாலை விபத்துகள் நிகழ்வதற்குப் பல காரணங்களைக் கூறலாம். வாகனமோட்டிகள் பொறுப்பின்றித் தங்களின் வாகனங்களைச் செலுத்துவதால் பெரும்பாலான விபத்துகள் ஏற்படுகின்றன. இச்சூழலில் வாகனங்களை அதிபயங்கர வேகத்தில் செலுத்துகின்றனர். வேகக் கட்டுப்பாடுகளையும் மீறும் இவர்களால் விபத்துகள் ஏற்படுகின்றன. மேலும், மற்ற வாகனமோட்டிகளுக்கும் பல இன்னல்கள் உண்டாகின்றன.

முதன்மைக் கருத்து

துணைக்கருத்து/விளக்கம்

சான்று

LIVEWORKSHEETS

சாலை விதிகளைப் பின்பற்றாமல் செல்வதாலும் சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. இருக்கைப்பட்டை அணியாமல் செல்வது, அறிவிப்புப் பலகைகளை அலட்சியம் செய்வது, அபாயக் குறியீடுகளை மீறிப் பயணிப்பது, வளைவுகளில் வேகத்தைக் குறைக்காமல் செல்வது போன்ற செயல்களாலும் சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. இருக்கைப்பட்டை அணியாமல் வாகனத்தைச் செலுத்துவதால் விபத்துகள் நேரிடும் போது உயிர்ச் சேதமும் ஏற்படுகின்றன.

முதன்மைக் கருத்து

துணைக்கருத்து/விளக்கம்

சான்று

LIVEWORKSHEETS

வாகனமோட்டிகளின் மெத்தனப் போக்கும் சிந்தனையும் சாலை விபத்துகள் நடக்க மற்றொரு காரணமாகத் திகழ்கின்றன. வாகனங்களைச் செலுத்தும்போது திறன்பேசியைப் பயன்படுத்துதல், மது அருந்திவிட்டு போதையில் வாகனத்தைச் செலுத்துதல் போன்ற எதிர்மறை நடவடிக்கைகளினால் விபத்துகள் ஏற்படுகின்றன. இத்தகைய சூழலில் வாகனமோட்டிகள் தங்களின் நிதானத்தையும் இழக்கின்றனர் என்பதும் உண்மையே.

முதன்மைக் கருத்து

துணைக்கருத்து/விளக்கம்

சான்று

LIVEWORKSHEETS

பத்தி 1

சாலை விபத்துகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

வாகனமோட்டிகள் பொறுப்பின்றி வாகனங்கள
அதிவேகத்தில் செலுத்துகின்றனர்.

வேகக் கட்டுப்பாட்டை மீறுதல்

பத்தி 2

விபத்துகள் நேரிடும் போது உயிர்ச்சேதம் ஏற்படுகின்றன

இருக்கைப்பட்டை அணியாமல் செல்லுதல், அறிவிப்புப்
பலகைகளை அலட்சியம் செய்தல், அபாயக் குறியீடுகளை
மீறிப் பயணிப்பது, வளைவுகளில் வேகத்தைக்
குறைக்காமல் செல்வது

சாலை விதிகளைப் பின்பற்றாமல் செல்வதால் சாலை
விபத்துகள் ஏற்படுகின்றன

LIVEWORKSHEETS

<u>பத்தி 3</u>

வாகனத்தைச் செலுத்தும்போது எதிர்மறை நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் வாகனமோட்டிகள் நிதானத்தை இழக்கின்றனர்.

வாகனமோட்டிகளின் மெத்தனப் போக்கும் சிந்தனையும் சாலை விபத்துகள் ஏற்பட காரணமாகின்றன.

திறன்பேசி பயன்படுத்துதல், மது அருந்துதல்,



LIVEWORKSHEETS